DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-65/2022

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முரளி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A4 present)

03.02.2026– 12.40 PM

முதல் விசாரணை:–

1. நான் தற்போது வாலிநோக்கம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 24.12.2020 ம் தேதி இரவு 11.55 மணியளவில் சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா, காவலர் 2293 திரு.சத்தியமூர்த்தி, முதல்நிலைக்காவலர் 1162 – திரு.ராஜா ஆகியோர் இரவு ரோந்து சென்றபோது சிறைக்குளம் கிராமத்தை சேர்ந்த யேசுதாஸ் மகன் செல்லத்துரை, மற்றும்சிக்கல் மேற்கு தெருவைச் சேரந்த சூரகண்ணன் மகன் ஆறுமுகவடிவேல் இருவரும் சிக்கல் இ.சி.ஆர் ரோட்டில் தேரிருவேலி விலக்க ரோட்டில் 10 X 15 அளவுள்ள கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டிற்கு வாழ்த்து தெரிவித்து பிளக்ஸ் போர்டை வைத்துக்கொண்டிருந்தனர். அப்போது இரவு ரோந்த சென்ற சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அனுமதி இல்லாமல் பிளக்ஸ் போர்டு வைக்கக்கூடாது என்றும், 3 கி.மி தொலைவில் உள்ள சிறைக்குளம் கிராமத்தினர் இங்கு வந்து பிளக்ஸ் போர்டு வைத்தார் எல்லா கிராமத்தை சேர்ந்தவர்களும் வைப்பார்கள் என்பதால் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்றும், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையுறு ஏற்படும் என்றும் நீதிமன்றத்தில் பிளக்ஸ் போர்டு வைப்பதற்கு தடை விதித்துள்ளன என்றும் கூறினார்.

3. அப்போது செல்லத்துரை என்பவர் நான் ரவுடியின் மகன் நாளைக்கு

காவல் நிலையத்தில் வந்து பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி பிளக்ஸ் போர்டை கொண்டு சென்றுள்ளார். கடந்த 25.12.2020ம் தேதி மாலை 06.58 மணியளவில் சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா காவல் நிலையத்தில் வழகது கோப்புகளை பார்வையிட்டுக்கொண்டிருந்த போது நான், தலைமைக்காவலர் 823 – திரு.முனியசாமி பெண் மு.நி.கா 1897 திருமதி.செல்வப்பிரியா, காவலர் 1162 – திரு.ராஜா ஆகியோர் அலவலில் இருந்த போது மேற்படி சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு சிறைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த யேசுதாஸ் மகன் செல்லத்துரை அவரது தம்பி சகேயு, யேசுதாஸ், மற்றும் ஆறுமுகவடிவேல் ஆகியோர் காவ்ல நிலையத்திற்கு வந்தனர்.

4. அப்போது யேசுதாஸ் நான் ரவுடி வந்திருக்கிறேன் நாங்கள் வைத்த பிளக்ஸ் போர்டை யார் எடுக்கச்சொன்னது என்று அதிக சத்தத்துடன் பேசிக்கொண்டு சார்பு ஆய்வாளரின் மேஜையை தட்டி அடிக்கும் தோரணையுடன் பேசினார். அப்போது எதிரி வடிவேல் கைலியை ஏற்றிக்கட்டிக்கொண்டு போலீஸ்னா நாங்க கேட்கனுமா சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அடிப்பதற்காக அருகில் கம்பை தேடிக்கொண்டிருந்தார். அப்போது எதிரி செல்லத்துரை போலீஸ்னா என்ன உன்னால ஒரு மயிரையும் புடுங்க முடியாது என அசிங்கமாக பேசினார். அப்போது எதிரியான சகேயு என்னல பேசிக்கிட்டு இருக்கிறீங்க மண்டையை அடித்து உடையுங்கள் அப்போது தான் நாம யாருன்னு தெரியும், சிக்கல் கிராமத்தில நாங்கள் சொல்வது தான் வேதம் என்று கூறினார். அப்போது மேற்படி எதிரிகள் அனைவரும் சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா பார்த்து நீ எப்படினாலும் ரோட்டிக்கு தானே வருவாய் காரை ஏற்றி கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தார்கள். அப்போது காவல்நிலையத்தில் அலுவலில் இருந்த நாங்கள் 4 பேரும் காவல் நிலையத்தில் பிரச்சனை செய்யக்கூடாது வெளியே போங்கள் என்று கூறவும் மேற்படி எதிரிகள் அங்கிருந்து சென்று விட்டனர். அப்போது தகவல்அறிந்து வந்த சார்பு ஆய்வாளர் திரு.கணேசன் என்பவரிடம் மேற்படி சம்பவம் குறித்து தன்னை பணி செய்ய விடாமலும், பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அசிங்கமாக பேசி

கொலை மிரட்டல் விடுத்த எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு கொடுத்தார். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக ஏர்வாடி தர்ஹா காவல் வட்ட ஆய்வாளர் விசாரணை செய்தார்கள். அன்றைய தினம் ஏர்வாடி தர்ஹா ஆய்வாளர் சிக்கல் காவல் நிலைய கூடுதல் பொறுப்பில் இருந்ததால் அவர் விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை சம்பவ தினத்திற்கு அன்றே ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். என்னை விசாரணை செய்த ஆய்வாளரிடம் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாகா சொல்லப்படும் நேரத்தில் இருந்து எவ்வளவு நேரத்தில் ஆய்வாளர் காவல் நிலையம் வந்தார் என்றால் சுமார 1 மணி நேரத்தில் வந்தார். இந்த வழக்கின் புகார்தாரர் நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில் என்னுயை மேலதிகாரி என்றால் சரிதான். சம்பவ தினத்திற்கு முதல் நாள் யார், எந்த அளவு, எதற்காக பிளக்ஸ் போர்டு வைத்திருந்தார்கள் என்ற விவரம் சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா அவர்கள் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான்.

சம்பவ தினத்திற்கு முன்தினம் நடந்த பிரச்சனை சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. இந்த சம்பவம் நடந்த சமயத்தில் தனிநபர்கள் யாரும் காவல் நிலையத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் காவல் நிலையத்தில் பாரா போலீசார் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது எதிரிகளை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தில் இல்லை என்றாலும் நான் இந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் புகார்தாரர் சார்பு ஆய்வாளர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளை கைது செய்திருப்போம் என்றால் சம்பவம் நடந்தது உண்மை எதிரிகளை கைது

செய்யவில்லை. இந்த வழக்கின் 1வது எதிரி ஒரு அரசியல் கட்சியின் ஒன்றிய செயலாளர் என்றால் சரிதான். அவர் அடிக்கடி காவல் நிலையம் வருவார் என்றால் சரியல்ல எப்போதாவது வருவார். வேறொரு வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளரான புகார்தாரருக்கும், 1வது எதிரிக்கும் ஏற்பட்ட முன்பகையின் காரணமாக சார்பு ஆய்வாளர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.05 22:24:56 +0530